5. திரு. எம். கே. டி. நடராசன்.
6. திரு. நீலநாராயணன்.
7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.
8. திரு. கே. ராஜாராம்."

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம் மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் :—

1. திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. கே. எஸ். கணபதி.
3. திரு. காட்டூர் கோபால்.
4. திரு. டி. வி. நாராயணசாமி.
5. திரு. எம். கே. டி. நடராசன்.
6. திரு. நீலநாராயணன்.
7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.
8. திரு. கே. ராஜாராம்."

* THIRU S. NARAYANASWAMY: Sir, I want to say a few words. I am in full agreement with the Bill being referred to a Joint Select Committee. Some of us are having interest in the electrical undertakings, and we will be getting compensation. This was a reason why I wanted to be out of the Select Committee and the Government have also rightly excluded me from the Committee. Because I was interested in one of the electrical undertakings being taken over, I thought it was proper that I

should not be on the Select Committee. All I want to say is that about 85 to 90 per cent of the shareholders are very, very small people. This is the only thing I want to refer to at this stage, because the Select Committee is going to make its recommendation and we will have an opportunity of speaking on the Bill after the report of the Select Committee is presented. I would like to appeal to the Members of the Select Committee and to this House to keep in mind that about 85 to 90 per cent of the shareholders of these private electrical undertakings are people who hold shares of the value of Rs. 5,000 and less and they are mostly middle class and lower middle class people and that their interests should be fully safeguarded in the fixation of compensation. That is all I want to say.

MR. CHAIRMAN : The hon. Member Thiru C. V. Rajagopal should not talk when I am putting the motion to the House.

மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"தமிழ் நாடு, 1973-ஆம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1973) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம் மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. கே. எஸ். கணபதி.
3. திரு. காட்டூர் கோபால்.
4. திரு. டி. வி. நாராயணசாமி.
5. திரு. எம். கே. டி. நடராசன்.
6. திரு. நீலநாராயணன்.

7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.

8. திரு. கே. ராஜாராம்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குறற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முனவடிவு எண் 3/1973.)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே "சட்டப் பேரவையால நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வுககு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்".

இந்த மன்றத்திலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டு கூட்டு ஆய்வுக் குழுவிறகு அனுப்பப்பட்டு அவர்களுடைய பரிந்துரை களோடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்திலே இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டு மென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் அடங்கிய கோரிக்கைகள், நோக்கங்கள் இவைகளெல்லாம் ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இந்த ஆய்வுக் குழுவிலே போட்டிருந் தாலும் இந்த ஆய்வுக் குழுவிலே அவர்கள் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டது இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். இந்தச் சட்டத்தை எதிர்த்தவர்களால் முதலிலே 1952-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தால் போடப்பட்ட "கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட்" இருக்கும்போது, இந்தச் சட்டம் தேவைதானா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. 1952-ஆம் ஆண்டு "கமிஷன் ஆப் என்கொயரி சட்டம்", இவை போன்ற நோக்கங்களுக்காக, லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காகக் கொண்டுவரப்படவில்லை. அன்றைய சூழ்நிலையில் நாட்டிலே நடக்கக் கூடிய பொது முக்கியத்துவம் வாய்ந்த ஏதாவது ஒரு

---

* 386-403 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பட்டுள்ளது.